கொள்ளை நோய்
------------------------------------------
மழை பெய்த இருட்டில்
நனைந்த மாடிப் படியில் ஏற முயற்சித்துக்
கீழே விழுந்து விழுந்து நகரும் ஒரு நத்தையைப் போல்
கொரோனா காலத்தில்
மரண பயத்தை முதுகில் ஒரு கூடாய்ச் சுமந்து
மெல்ல நகர்கிறேன் வாழ்தலின் ருசி தேடி.
கொட்டும் மழையில் சிதறும் பவழமல்லிப் பூக்கள்போல்
என்னைச் சுற்றிலும் மரணத்தின் வாயில்
விழுகின்றனர் தினந்தோரும்
நண்பர்கள், உறவினர் மற்றும்
புகைப்படங்களில் மட்டுமே பார்த்தறிந்த மனிதர்கள்.
மரணத்தின் நெடி
மூக்கில் ஒரு விஷ வாயுவைப் போல் ஏறுகையில்
கவலை ரேகைகள் முகத்தில் விழுந்த
சுருக்கங்களாய் நிலைக்க
புன்னகைக் களிம்பை முகத்தில் பூசியபடி
வலம் வருகிறேன் வலைத்தளங்களில்.
கொரோனாவுடன் போரிட்டுச் சாவதுதான்
நியதியெனில்
வாருங்கள் நாம் போரிடுவோம்
செத்துக் கொண்டே.
--- 14 அக்டோபர் 2020

